# 18 சோதனையில் வெற்றி

**லூக்கா** : 4: 1-13

கிறிஸ்தவப்பிள்ளை ஒன்று ஞாயிறு ஆராதனைக்கு செல்வதற்கு ஆயத்தம் செய்து கொண்டிருந்தபோது தொலைபேசி மணி ஒலித்தது. அது தன் நண்பனிடம் இருந்து வந்த மிகவும் மகிழ்ச்சியான செய்தியாகும். அதாவது சந்தோசமாக சுற்றுலாப் பயணம் செல்வதற்கான அழைப்பாகும். இது அவன் முன்னால் வைக்கப்பட்ட சோதனையாகும். ஆலயம் செல்வதா? சுற்றுலா செல்வதா? அவனுக்கு திடீரென பாடசாலையில் கற்றுக் கொண்ட பாடம் நினைவில் வந்தது. இயேசு சோதனைகள் முன்னால் இறைவார்த்தையின் மூலம் செயற்பட்ட முறையை மனதிற் கொண்டு நன்மையான காரியங்களையே ஓய்வுநாளில் செய்யவேண்டும் என உடனடியாகத் தீர்மானித்தான்.

எமது வாழ்நாட்களில் நாம் முகம் கொடுத்த சோதனைகள் மிகவும் கவர்ச்சியான கருத்து உள்ளதாய் இருந்திருக்கும். அப்படியான சந்தர்ப்பங்கள் உங்களுக்கு நினைவில் இருக்கும். விளையாட்டு மைதானத்தில், பாடசாலையின் தவணைப் பரீட்சையில் சோதனைகள் மூலம் குழப்பம் ஏற்படும். வாலிபத்தைக் கடந்து செல்லும் நீங்கள் முகம் கொடுத்த சோதனைகள் வேறுபட்டவை என அறிந்திருப்பீர்கள். எதிர்காலத்தில் தொழிலில் ஈடுபடும்போது பலவிதமான சோதனைகளுக்கு முகம் கொடுக்க நேரிடலாம். வாழ்வில் எந்த சந்தர்ப்பத்திலும் சோதனைகள் எம் மத்தியில் பல வடிவங்களில் வரும் என்பதை அறிந்து கொள்ளவேண்டும். இவற்றின் முன்னால் நன்மையாக செயற்பட முயற்சிக்கும்போது, சாத்தான் ஆலோசிப்பது இலகுவான வழியைத் தெரிவு செய்வதே. அப்படியான தீமையான வழியில் செல்லும்போது நாம் சோதனைகள் முன்னால் தோல்வியுறுவோம்.

இயேசு யோர்தான் நதியில் திருமுழுக்குப் பெற்று தூய ஆவியால் நிரம்பி பாலைவனத்திற்கு சென்று நாற்பது நாட்கள் உபவாசமாய் இருந்து தனது பணிக்கு ஆயத்தமானார். இதைப்பற்றி நற்செய்திகள் கூறுகின்றன. மக்களுக்காக நற்பணி செய்ய முயற்சித்தபோது, அதற்கான இலகுவான வழி அலகை மூலம் முன்வைக்கப்பட்டது.

**இயேசுவுக்கு ஏற்பட்ட சோதனைகள்**
**லூக்கா:** 4: 1-13.

## முதலாம் சோதனை லூக்கா 4:3

பாலை நிலத்தில் மனிதனாகிய இயேசு உணவருந்தாமல் நாட்களைக் கழித்தபோது அவருக்கு பசி ஏற்பட்டது. அவ்வேளையில் உணவை வழங்குவதன் மூலம் மக்களை தன்வசப்படுத்தலாம் என்று எண்ணிய அலகை அச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தியது. பாலை நிலமாகிய அப்பிரதேசத்தில் காற்றினால் வட்டமாக வடிவமைக்கப்பட்ட வெள்ளை நிறக்கற்கள் காணப்பட்டன. அதை அப்பமாக மாற்றி மக்களின் சரீரத் தேவைக்காக உணவை பெற்றுத் தருவதற்கும் இயேசு இறைமகனா என்ற சவாலையும் முன்வைத்தது மறை நூலை தியானித்து அறித்திருந்த இயேசு அச் சோதனையில் வெற்றிபெற இறைவார்த்தையை உபயோகித்தார்.

## பதில்

மனிதர் அப்பத்தினால் மட்டுமன்று மாறாக கடவுளின் வாய்ச்சொல் ஒவ் வொன்றிலும் உயிர் வாழ்கின்றார். என இதன் மூலம் வெளிப்படுத்தினார். இணைச் சட்டம் 8-3 வசனத்தின் மூலம் அலகைக்கு பதில் அளித்து சவாலைவெற்றி கொண்டார். மனித வாழ்விற்கு சரீரத்தின் தேவைகள் மட்டுமல்ல ஆன்மீகபோசணை அத்தியாவசியம் என இதன் மூலம் வெளிப்படுத்தினார்.

இறையரசின் அங்கத்தவர்கள் தமது சரீரத் தேவைக்காக
செயற்படும்போது அதற்கு மேலாக ஆன்மீக உணவை
பெற்றுக்கொள்வதற்கு முயற்சிப்போம்.

லூக்கா 4 : 6 - 7 அலகை அவரை உயர்ந்த இடத்தில் வைத்து அவர் முன்னால் வைத்த சோதனை உலகில் உள்ள அனைத்தையும் காட்டி 'இவற்றின் மேல் முழு அதி காரத்தையும் உமக்குக் கொடுப்பேன். இவையாவும் என்னிடம் ஒப்படைக்கப் பட்டிருக்கின்றன. நான் விரும்பியவாறு இவற்றைக் கொடுப்பேன் எனவே நீர் என்னை வணங்கினால் அனைத்தும் உம்முடையவையாகும்' என்றது.

## இரண்டாம் சோதனை லூக்கா 4:5-7

இச்சோதனையில் அலகைக்கு பொருத்தமான உலக அரசு வல்லமை அனைத் தையும் இயேசுவுக்கு தருவதற்கு அலகை அவருக்கு ஒரு நிபந்தனையை விதித்தது அதாவது தன்னை வணங்கும்படி கூறியது.அதன் மூலம் தீமையின் சக்திக்கு கீழ்ப் படிந்து உலக அரசை நிலைநாட்டுவதற்கான சவாலை முன்வைத்தது. ஆனால் இயேசு இவ்வுலகத்திற்கு வந்தது உலக அரசை நிலை நாட்டுவதற்கல்ல இறையரசை

கட்டி எழுப்பு வதற்கும் இறை ஆட்சியை நிலை நாட்டுவதற்குமே வந்தார். இறையரசின் பெறுமதியானது கடவுளுக்கு கீழ்ப்படிந்து இறை பயத்தோடு வாழும் மக்களை ஒன்றிணைப்பதாகும்.

### பதில்

இயேசு இறைவார்த்தையின் மூலம் ''உன் கடவுளாகிய ஆண்டவரை வணங்கி அவர் ஒருவருக்கே பணி செய்வாயாக'' என பதில் அளித்தார். இணைச்சட்டம் 6:13 வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சொத்து செல்வம் வலிமை புகழ் யாவும் உலகைச் சார்ந்தவையாகும். இதற்கு முதல் இடம் அளிக்கும் சமுதாயத்தில் வாழும் கிறிஸ்தவர்களாகிய எமக்கு இயேசு அளித்த பதில் தெளிவுபடுகின்றது. எனவே கடவுளுக்கு அனைத்து காரியங்களிலும் நாம் முதலிடம் கொடுக்கவேண்டும். கடவுளுக்கு முன்பாக இறை பயத்தோடு வாழவேண்டும். இறையரசின் குணவியல்புகளோடு கடவுளை மட்டுமே வணங்கிக் கீழ்ப்படிவோம்.

## மூன்றாம் சோதனை லூக்கா 4:9-11

இந்த மூன்றாம் சோதனை மூலம் இயேசு முகம் கொடுத்தது புதுமைகள் மூலமாக மக்களை வெற்றிகொள்ளும் சவாலாகும். அதாவது எருசலேம் கோவிலின் உயர்ந்தபகுதியில் இருந்து கீழே குதித்து வீரசெயலை செய்வதற்காகும். இதற்காக அலகை இயேசுவை குழப்புவதற்காக திருமறையில் இருந்து ஒருபகுதியை எடுத்துக் கொண்டது.'' நீர் செல்லும் இடமெல்லாம் உம்மைக் காக்கும்படி தம் தூதர்களுக்கு அவர் கட்டளையிடுவார்'' திருப்பாடல் 91:1-12 என்ற வசனமாகும். ''உம் கால் கல்லின் மேல் மோதாதபடி அவர்கள் தங்கள் கைகளில் தாங்கிக் கொள்வர்'' அலகை சோதனைகளை முன்வைக்கும் போது இறைவார்த்தைகளை பயன்படுத்திக் கொள்வது இதன் மூலம் தெளிவாகின்றது. சில சந்தர்ப்பங்களில் நாமும் இவ்வாறு சோதனைகளுக்கு உட்பட்டிருப்போம்.

### பதில்

இயேசு இச்சோதனையை நிராகரித்து கொடுத்த பதிலானது''உன் கடவுளாகிய ஆண்டவரை சோதிக்க வேண்டாம்'' இணைச்சட்டம் 6:16 வசனத்தின்படி கடவுளில் மட்டுமே பூரணநம்பிக்கை வைத்து இயேசு இம் மூன்றாம் சோதனையை வென்றார் என்பது தெளிவாகின்றது. இயேசு சிலுவையில் இருக்கும் சந்தர்ப்பத்திலும் இவ்வகையான சோதனை ஏற்பட்டது. அதாவது புதுமை செய்யுமாறு விடப்பட்ட சவாலாகும். அவரோடு சிலுவையில் அறையப்பட்ட கள்வன் இவ்வாறான சவாலைக்

*கொடுத்தான். லூக்கா: 23:39 ''நீ மெசியா தானே உன்னையும் என்னையும் காப்பாற்று'' எனக் கூறினான்.*

*சோதனைகளின்போது இயேசு பயமின்றி இறைவார்த்தைகளைப் பயன் படுத்தி அலகையின் ஆலோசனைகளை நிராகரித்தார். இயேசு இறை விருப்பத்தை நிறைவேற்றுவதற்காக சிலுவைப் பாதையை தெரிவு செய்தார்.*

## சிந்தித்துப் பார்ப்போம்.

இயேசு உலகிற்கு வந்தது இறையரசைக் கட்டி எழுப்புவதற்காகும். ஆனால் சாத்தானின் நோக்கம் உலக அரசை இந்த பூமியில் நிலைநாட்டுவதே ஆகும். எனவே இதற்காகவே இயேசுவை சோதித்தது தீயசக்திகளை மேற் கொண்டு, வெற்றி பெற இறைவார்த்தையின் வழிகாட்டல் மிகவும் முக்கி யமானதாகும்.

எமது வாழ்க்கைப் பயணத்தில் பல சந்தர்ப்பங்களில் பல சோதனை களுக்கு முகம் கொடுத்து இருப்போம். கிறிஸ்துவைப் பின்பற்றும் நாம் தூய ஆவியானவரின் வழி காட்டுதலைத் தேடவேண்டும். இறை வார்த்தையை சரியாகப் புரிந்து கொண்டு அதனூடாக இறை வழி நடத்துதலைத் தேடு வதற்கு முயற்சி செய்ய வேண்டும் இறையரசின் பிள்ளைகளாக சோ தனைகளின் முன்னால் இறை விருப்பத்திற்குப் பணிந்து நடப்பதற்கு கற்றுக்கொள்வோம்.

### *செயற்பாடு*

1. *இயேசு சோதனைகளை வென்றது போல் நீங்களும் சோதனைகளுக்கு முகம் கொடுத்த சந்தர்ப்பங்களில் வெற்றி பெற உதவி நாடும் வழிகள் மூன்றை எழுதுக.*

2. *பத்து கற்பனைகளில் குறிப்பிடப்பட்ட கற்பனையையும் இரண்டாம் சோதனையையும் ஒப்பிட்டு நோக்குவோம்.*